# அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

## நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் நிறைவேற்று சேவை வகுதியின் தரம் III ஐச் சேர்ந்த உதவிச் செயலாளர் (சட்டம்) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் – 2023

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் நிறைவேற்று சேவை வகுதியின் தரம் III ஐச் சேர்ந்த உதவிச் செயலாளர் (சட்டம்) பதவிகளில் காணப்படுகின்ற வெற்றிடங்களுக்கு தகைமை வாய்ந்தவர்களை தெரிவு செய்து கொள்வதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைக்கு அமைய தகுதிவாய்ந்த இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த அறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைய தயார் செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை கீழே குறிப்பிடப்பட்டுள்ள திகதி அல்லது அதற்கு முன்னர் **செயலாளர், நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு, இலக்கம் 19, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''**நிறைவேற்று சேவை வகுதியின் தரம் III ஐச் சேர்ந்த உதவிச் செயலாளர் (சட்டம்) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்**'' எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

**(அ) விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதி 2023.06.21 ஆம் திகதியாகும்.**

**குறிப்பு I** : விண்ணப்பப்படிவம் அல்லது அது சம்பந்தமான கடிதமொன்று தபாலில் காணாமல் போனதாக அல்லது தாமதமானதாக சமர்ப்பிக்கப்படுகின்ற முறைப்பாடுகள் பற்றிக் கவனம் செலுத்தப்பட மாட்டாது. இறுதித் திகதி வரை விண்ணப்பப்படிவத்தை தாமதப்படுத்துவதன் மூலம் ஏற்படக்கூடிய இழப்புக்களை விண்ணப்பதாரிகள் ஏற்றுக் கொள்ளல் வேண்டும்.

### 01. ஆட்சேர்ப்புச் செய்யும் முறை -

அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளிலிருந்து, அரசாங்க சேவைகள் ஆணைக்குழவினால் நியமனம் செய்யப்படுகின்ற நேர்முகப் பரீட்சைக் குழுவினால் நடாத்தப்படுகின்ற தகைமையை மதிப்பீடு செய்வதற்கான நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் உச்சளவான புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளும் அபேட்சகர்கள் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்கள். அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள (06 ஆம் இலக்கத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள) புள்ளி வழங்கும் ஒழுங்குமறைக்கு அமைய தகைமைகளை மதிப்பீடு செய்யும் நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

நியமனம் அமுலுக்குவரும் திகதியாக இருப்பது நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திகதி அல்லது நியமனம் பெற்றவர் பதவியில் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்ட திகதி ஆகிய இரண்டின் பின்னர் எய்தும் திகதியாகும்.

02. **தேவையான தகைமைகள் -**

(i) கல்வி / தொழில்சார் தகைமைகள் -

பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றிலிருந்து சட்டவியல் பட்டத்தை பெற்றிருத்தல் அல்லது உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்திருத்தல்.

(ii) அனுபவம்

உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியொருவராக சத்தியப் பிரமாணம் செய்து கொண்ட பின்னர் சட்டத்தரணி ஒருவராக மூன்று (03) வருடங்களுக்குக் குறையாத முனைப்பான தொழில்சார் அனுபவத்தைப் பெற்றிருத்தல். (முனைப்பான தொழில்சார் தகைமையை உறுதி செய்வதற்காக சமர்ப்பிக்கப்படுகின்ற ஆவணங்களில் அனுபவம் பெற்றுக் கொள்ளப்பட்ட காலம், சான்றுப்படுத்துபவரின் பதவி முத்திரை மற்றும் சான்றுப்படுத்திய திகதியை தெளிவாகக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.)

**குறிப்பு II** : அடிப்படைத் தகைமையை உறுதி செய்யும் ஆவணங்களில் விண்ணப்பதாரியினாலேயே சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள் விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். **சேவைக் காலம் ஆரம்பமாகும் மற்றும் நிறைவடையும் திகதி தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்களை இணைக்காதுள்ள விண்ணப்பப்படிவங்கள் அறிவிப்புச் செய்யாது நிராகரிக்கப்பட முடியும்.**

(iii) **உடல்சார் தகைமை –**

ஒவ்வொரு அபேட்சகரும் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதியளவு உடல்சார் மற்றும் உளவியல்சார் தகைமையைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

(iv) **ஏனைய தகைமைகள் -**

- இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
- நல்லமுறையில் ஆங்கில மொழியை கையாளக்கூடிய ஆற்றல் இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரி சிறந்த நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பம் கோரும் இறுதித் திகதியில் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யத் தேவையான சகல தகைமைகளையும் சகல வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

03. சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் மற்றும் சேவை நிபந்தனைகள்

(i) இப்பதவி நிரந்தரமானதும். ஓய்வூதிய உரித்துடையது. உங்களுக்கு உரித்தான ஓய்வூதிய முறை பற்றி எதிர்காலத்தில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற கொள்கைசார் தீர்மானங்களுக்கு நீங்கள் உட்படுவீர்கள். தாங்கள் விதவை மற்றும் அநாதை ஓய்வூதியத்திட்டத்திற்கு / விதவை, தபுதாரர் மற்றும் அநாதை ஓய்வூதியத்திட்டத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசாங்கத்தினால் அடிக்கடி விதித்துரைக்கப்படுகின்றவாறு தாங்கள் அதற்கான பங்களிப்புத் தொகையை செலுத்தல் வேண்டும்.

(ii) இந்த நியமனம் 03 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது. பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு 03 வருட காலப்பகுதிக்குள் ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(iii) 2020.10.16 ஆம் திகதிய அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 18/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் அதன் விளைவாய்ந்தன்மைவாய்ந்த சுற்றறிக்கைகளுக்கு அமைய இப்பதவிக்கு நியமனம் பெற்று 05 வருடங்களை விஞ்ச முன்னர் சேவைக்கு இணைந்துகொண்ட மொழிக்கு மேலதிகமாக மற்யை அரசகரும மொழி தொடர்பான உரிய தேர்ச்சியை பூர்த்தி செய்துகொள்ளல் வேண்டும் என்பதுடன், அரசகரும மொழியல்லாத மொழி மூலமாக சேவையில் இணைந்து கொண்டுள்ள அலுலவர்கள் தகுதிகாண் காலப்பகுதிக்குள் உரிய அரச கரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

(iv) 2310/29 ஆம் இலக்க 2022.12.14 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடவடிக்கைமுறை விதிகளுக்கும், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவைக்கும், அரசாங்க நிதிப் பிரமாணங்களுக்கும், திணைக்களம்சார் ஒழுங்குவிதிகள் மற்றும் கட்டளைகளுக்கும் இப்பதவி உட்பட்டதாகும்.

(v) விண்ணப்பிக்கும் மொழி மூலத்தை பின்னர் மாற்றம் செய்ய இடமளிக்கப்பட மாட்டாது என்பதுடன், தாங்கள் நியமனம் பெறுவதற்கு தகைமைபெற்ற மொழி மூலமாக இருப்பது, தாங்கள் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடுகின்ற மொழி மூலமாகும்.

04. வயதெல்லை -

விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 21 வயதுக்குக் குறையாதவறாகவும், 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். தற்போது அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள அலுவலர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

05. **சம்பள அளவுத்திட்டம் -**

2016.02.25 ஆம் திகதிய 3/2016 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் அட்டவணை 1 இற்கமைய இப்பதவிக்கு உரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா : 47615-10×1335-8×1630-17×2170-110895/- (SL-1-2016) ஆகும்.

06. **தகைமையை மதிப்பீடு செய்யும் நேர்முகப் பரீட்சைக்கு பின்வரும் புள்ளி வழங்கும் முறை அடிப்படையாகக் கொள்ளப்படும்.**

| தொடர் இல. | விடயம் | புள்ளி | உச்ச புள்ளி |
|---|---|---|---|
| **01** | **மேலதிக கல்வித் தகைமை** | | **20** |
| | பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட, | | |
| | • முதலாம் வகுப்பு சித்தியுடனான சட்டவியல் பட்டம் | 20 | |
| | • இரண்டாவம் வகுப்பு மேல் சித்தியுடனான சட்டவியல் பட்டம் | 15 | |
| | • வகுப்பு சித்தியுடனான சட்டவியல் பட்டம் | 12 | |
| | • சாதாரண சித்தியுடனான சட்டவியல் பட்டம் | 10 | |
| | அல்லது | | |
| | • சட்டக் கல்லூரியின் இறுதி ஆண்டில் முதலாம் வகுப்புச் சித்தி | 15 | |
| | • சட்டக் கல்லூரியின் இறுதி ஆண்டில் இரண்டாம் வகுப்புச் சித்தி | 10 | |
| | **மேலதிக தொழில்சார் தகைமைகள்** | | **15** |
| | அ). பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட சட்டம் பற்றிய பட்டப் பின் படிப்பு | 15 | |
| | ஆ) பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட சட்டம் பற்றிய பட்டப் பின் டிப்ளோமா அல்லது இலங்கை சட்டக் கல்லூரியின் உயர் சட்டக் கல்வி நிறுவகத்திடமிருந்து பெற்றுக் கொண்ட பட்டப் பின் சட்ட டிப்ளோமா | 10 | |
| **02** | மேலதிக அனுபவம்<br>வழக்குகள் சம்பந்தமான ஆவணங்களை தயார் செய்தல் மற்றும் திறந்த நீதிமன்றத்தில் விளக்கமளித்தல் | | **30** |

| | வழக்குத் தாக்கல் செய்தல் (ஒரு வழக்குக்கு) | நீதிமன்றத்தில் ஆஜராகி விடய விளக்கமளித்தலுக்கான புள்ளி (ஒரு வழக்குக்கு) |
|---|---|---|
| உயர் நீதிமன்றம் | 2 | 5 |
| மேன்முறையீட்டு நீதிமன்றம் | 2 | 4 |
| மேல் நீதிமன்றம் | 2 | 3 |
| மாவட்ட நீதிமன்றம் | 4 | 5 |
| நியாயாதிக்க சபை | 2 | 3 |

**குறிப்பு –**

**மேலுள்ள தகைமைகளை உறுதி செய்வதற்கு குறித்த வழக்குத் தீர்ப்புக்களின் பிரதிகள் அல்லது இறுதித் தடவையாக வழக்கு நடைபெற்ற தினத்தின் வழக்கு அறிக்கையின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியை நேர்முகப் பரீட்சைக் குழுவிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.**

| | | | |
|---|---|---|---|
| **03** | **தகவல் தொழில்நுட்பம் /தகவல் தொழில்நுட்ப சட்டம் பற்றிய அறிவு** | | **15** |
| | (அ)பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றிலிருந்து பட்டத்திற்கு தகவல் தொழில்நுட்பம் அல்லது கணினியியலை பிரதான பாடமொன்றாக கற்றிருத்தல். | 15 | |
| | (ஆ)பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றிலிருந்து அல்லது இலங்கை சட்டக் கல்லூரியிலிருந்து அல்லது வேறு அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவகமொன்றிலிருந்து பெற்றுக் கொண்ட தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்பம் பற்றிய டிப்ளோமா. | 12 | |
| | (இ)பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றிலிருந்து பெற்றுக் கொண்ட கணினியியல் அல்லது தகவல் தொழில்நுட்பம் பற்றிய டிப்ளோமா அல்லது வேறு நிறுவகமொன்றிலிருந்து பெற்றுக் கொண்ட கணினியியல் அல்லது தகவல் தொழில்நுட்பம் பற்றிய NVQ 5 அல்லது அதற்கு மேற்பட்ட மட்டத்திலான டிப்ளோமா | 10 | |

| | | | |
|---|---|---|---|
| | (ஈ)பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றிலிருந்து அல்லது இலங்கை சட்டக் கல்லூரியிலிருந்து அல்லது வேறு அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவகமொன்றிலிருந்து தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்பம் சட்டத்துறையில் பாடநெறிகளைக் கற்று / பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றி பெற்றுக் கொண்டுள்ள சான்றிதழ்கள். (ஒரு சான்றிதழுக்கு 2 புள்ளிகள் வீதம் உச்சளவாக இரண்டு சான்றிதழ்களுக்கு புள்ளிகள் வழங்கப்படும்.) | 04 | |
| **04** | **மொழி ஆற்றல்**<br>(அ) பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் ஒன்றிலிருந்து ஆங்கில மொழியை பிரதான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட பட்டம்.<br>(ஆ) அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச அல்லது தேசிய மட்டத்திலான மாதிரி நீதிமன்ற போட்டிகளில் (e.g., Moot court competitions) வெளிப்படுத்தியுள்ள ஆங்கில மொழித் தேர்ச்சி<br><u>தனிப்பட்ட அடிப்படையில்</u><br>i. முதல் இடம்/சிறந்த திறமை - 12<br>ii. இரண்டாம் இடம் - 10<br>iii. மூன்றாம் இடம்/ வேறு திறமைகள் - 08<br><u>குழு அடிப்படையில்</u><br>i. முதல் இடம்/சிறந்த திறமை - 10<br>ii. இரண்டாம் இடம் - 08<br>iii. மூன்றாம் இடம்/ வேறு திறமைகள் - 06<br><br>(இ) பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றிலிருந்து ஆங்கில மொழிக்குப் பெற்றுக் கொண்ட டிப்ளோமா அல்லது வேறு நிறுவனமொன்றிலிருந்து ஆங்கில மொழிக்குப் பெற்றுக் கொண்ட SLQF 3 அல்லது அதற்கு மேற்பட்ட மட்டத்திலான டிப்ளோமா அல்லது அரசின் பயிற்சி நிறுவகமொன்றிலிருந்து /அரச பயிற்சி நிறுவகமொன்றுடன் இணைந்த நிறுவனமொன்றிலிருந்து ஆகக் குறைந்தது 1500 கற்கை மணித்தியாலங்களைக் கொண்ட பாடநெறியை கற்று பெற்றுக் கொண்ட ஆங்கில மொழிக்கான டிப்ளோமா.<br>(ஈ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தரப்) பரீட்சையில் (உள்நாடு அல்லது லண்டன்) ஆங்கில மொழிக்கு ஆகக் குறைந்தது அதிதிறமைச் சித்தியைப் பெற்றிருத்தல் அல்லது | 15<br><br>12<br><br>10<br><br>08 | **15** |

| | | | |
|---|---|---|---|
| | IELTS சித்திப் புள்ளி 6.5 அல்லது அதற்கு மேல், TOEFL-IBT 79 அல்லது அதற்கு மேல், TOEFL-CBT 213 அல்லது அதற்கு மேல் TOEFL-PBT 550 அல்லது அதற்கு மேலாக இருத்தல்.<br><br>(இ) பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றிலிருந்து ஆங்கில மொழிக்குப் பெற்றுக் கொண்ட உயர் சான்றிதழ் அல்லது வேறு நிறுவனமொன்றிலிருந்து ஆங்கில மொழிக்குப் பெற்றுக் கொண்ட SLQF 2 மட்டத்திலான சான்றிதழ் | 05 | |
| **05** | **நேர்முகப் பரீட்சையில் வெளிப்படுத்தும் திறமை**<br><br>பதவியின் வகிபாகத்தை நிறைவேற்றுவதற்கு முன்வரும் விண்ணப்பதாரியின் :<br><br>○ பலம் (Strength questions) (01 புள்ளி),<br>○ சந்தர்ப்ப ரீதியாக தீர்மானம் மேற்கொள்ளும் ஆற்றல் (Situational questions)(02 புள்ளி) மற்றும்<br>○ திறமை (Competency questions) (02 புள்ளி)<br><br>மதிப்பீடு செய்வதை நோக்காகக் கொண்ட கேள்விகளுக்கு வழங்கப்படும் பதிலுக்கு அமைய புள்ளிகள் வழங்கப்படும். | | **05** |
| | **மொத்தம்** | | **100** |

**குறிப்பு : மேலே புள்ளி வழங்கும் முறையில் மேலதிக அனுபவம் தவிர ஏனைய ஒவ்வொரு தலைப்பின் கீழும் உயர் தகைமைக்கு மாத்திரம் புள்ளி வழங்கப்படும்.**

**07. அபேட்சகர்களின் ஆள்அடையாளம்**

தகைமையை மதிப்பீடு செய்யும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவது சகல வகையிலும் பூரணத்தும்மிக்க விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பித்துள்ள அபேட்சகர்கள் மாத்திரமாகும்.

நேர்முகப் பரீட்சையின் போது சகல சான்றிதழ்களினதும் மூலப் பிரதிகள் மற்றும் விண்ணபதாரியினாலேயே முறையாக சான்றுப்படுத்தப்பட்ட ஒரு பிரதி வீதம் சமர்ப்பித்தல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சையின் போது தமது ஆள்அடையாளத்தை உறுதி செய்வதற்காக பின்வரும் ஆள்அடையாளப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

(i) ஆட்பதிவு ஆணையாளரினால் வெளியிடப்பட்டுள்ள செல்லுபடியான தேசிய அடையாள அட்டை

(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

## 08. விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிக்க வேண்டிய முறை

(i) விண்ணப்பப்படிவங்களை 2023 ஜுலை மாதம் 21 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் "செயலாளர் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சுக்கு" எனும் முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். அத்திகதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

(ii) சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பப்படிவத்தின் மாதிரியமைப்பு இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ளது. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவத்தை A4 அளவான தாளில் தயார் செய்துகொள்ளல் வேண்டும் என்பதுடன், இலக்கம் 1 முதல் 13 வரையான முதலாம் பக்கத்திலும், 14 முதல் இரண்டாம் பக்கத்தில் 16 வரையான மூன்றாம் பக்கதிலும் உள்ளடக்கும் வகையில் தயார் செய்து தமது கையெழுத்து மூலம் பூர்த்தி செய்தல் வேண்டும்.

(iii) விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''**நிறைவேற்று சேவை வகுதியின் தரம் III ஐச் சேர்ந்த உதவிச் செயலாளர் (சட்டம்) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்**'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

(iv) விண்ணப்பப்படிவத்தில் அபேட்சகரின் கையொப்பத்தை அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர் /சமாதான நீதவான் /சத்தியப்பிரமாண ஆணையாளர் /சட்டத்தரணி /பகிரங்க நொத்தாரிசு /முப்படைகளின் தத்துவமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் அல்லது ரூபா 47,615/- அல்லது அதற்கு மேற்பட்ட மாதாந்த திரட்டிய சம்பளத்தைப் பெறும் அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையின் நிரந்தர பதவியை வகிக்கும் அலுவலர் ஊடாக சான்றுப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

(v) தற்போது அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள அலுவலர்கள் தமது விண்ணப்பப்படிவங்களை தாம் சேவையாற்றுகின்ற திணைக்களத்தின் திணைக்களத் தலைவர் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

(vi) இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இசைவாக இல்லாத விண்ணப்பப்படிவங்கள் அறிவிப்புச் செய்யாது நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவங்கள் காணாமல் போதல் அல்லது தாமதமாதல் தொடர்பில் எந்தவொரு முறைப்பாடும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

## 9. உண்மைக்கு மாறான தகவல்களை வழங்குதல்:

தாங்கள் அனுப்பியுள்ள விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் தகவல் உண்மைக்கு மாறானது அல்லது தவறானது என்பது ஆட்சேர்ப்புச் செய்து கொள்ள முன்னர் வெளிப்படுத்தப்படுமாயின் தங்களின் அபேட்சகர் அந்தஸ்து ரத்துச் செய்யப்படும். அவ்வாறான உண்மைக்கு மாறான அல்லது தவறான தகவல்

ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பின்னர் வெளிப்படுத்தப்படுமாயின் உரிய நடவடிக்கைகளுக்கு உட்பட்டு பதவி நீக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**10.** காணப்படுகின்ற சேவைசார் அவசியத்தன்மைக்கு அமைய வெற்றிடங்களை நிரப்பாதிருக்கும் உரிமை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவுக்கு உண்டு.

**11.** இந்த வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலமான உரைகளுக்கு இடையே ஒவ்வாமை அல்லது முரண்பாடு ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழி மூலமான உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

**12.** இந்த அறிவித்தலில் ஏற்பாடுகள் செய்யப்படாதுள்ள யாதாயினுமொரு விடயம் தொடர்பாக அரசாங்க சேவைகள் ஆணைக்குழு மேற்கொள்ளும் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைக்கு அமைய,

செயலாளர்,

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு

2023.05.19